OS 60/2024
வா.சா.1 விஜயலட்சுமி க/பெ சிவதாஸ்
நாள் 07.04.2026

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. பிரதிவாதி ரவி எனது சகோதரர் என்றால் சரிதான். அவர் 1984ல் இராணுவத்தில் வேலைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் என்ன வேலை செய்தார் என்றால் மின்சார வாரியத்தில் ஒரு அதிகாரியாக வேலை பார்த்தார். எனது தகப்பனார் வேலைக்கு சேர்ந்த போது அதிகாரியாக சேர்ந்தாரா என்றால் இல்லை அடிமட்டத்தில் சேர்ந்து அதன் பின்னர் தான் அதிகாரி ஆனார். எனது தகப்பனார் 1998ல் அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றார் என்றால் போர்மேனாக இருந்து ஓய்வு பெற்றார். பிரதிவாதி ரவிக்கு 1993ல் திருமணம் நடந்தது என்றால் சரிதான். அப்போதும் அவர் இராணுவத்தில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். எங்களது குடும்பத்தில் எனது சகோதரர் ரவி ஒரே ஆண்மகன் என்றால் சரிதான். ஒரே ஆண்மகன் என்பதால் தான் எனது அண்ணன் ரவி எனது அப்பாவிற்கு இராணுவத்தில் பணிபுரிந்த போது பணம் அனுப்பி வந்தார் என்றால் பணம் அனுப்பினாரா என்று எனக்கு தெரியாது எனது தகப்பனாரும் சம்பாதித்து வந்தார். பிறகு சாட்சி எனது அண்ணன் பணம் அனுப்பி இருந்தாலும் எனது அப்பா வாங்கியிருக்க மாட்டார் எனது அம்மா வேண்டுமானால் வாங்கியிருக்கலாம்.

2. எனது அண்ணன் 2001ல் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். ஓய்வு பெற்ற பிறகு மீண்டும் தலைமை காவலராக பணியில் சேர்ந்து ஓய்வு பெற்று விட்டார் என்றால் சரிதான். தாவா 1வது அயிட்ட சொத்து 24.11.1984ல் வாங்கப்பட்டது என்றால் சரிதான். தாவா 2வது அயிட்ட சொத்து 23.01.1995ல் வாங்கப்பட்டது என்றால் சரிதான். தாவா இரண்டு அயிட்ட சொத்துகளும் பிரதிவாதியின் சுய வருமானம் கொண்டு வாங்கப்பட்ட சொத்துகள் என்றால் இல்லை எனது அப்பா சம்பாத்தியத்தில் வாங்கப்பட்டது. எனது அண்ணன் தான் பணம் கொடுத்தார் என்றாலும் எனது அப்பாவின் பெயரில் வாங்கப்பட்டது என்றாலும் இல்லை. எனது அண்ணன் பணம் கொடுக்கவில்லை எனது அப்பா தான் வாங்கினார். 1வது அயிட்ட சொத்து 3 அளவுகள் கொண்ட சொத்து என்றால் சரிதான். 1வது அயிட்ட சொத்தை பராமரிப்பு செய்ய பிரதிவாதி ரவி ரூ.3லட்சம் செலவு செய்தார் என்றால் இல்லை அப்பா தான் செலவு செய்தார். எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 1980ல் நடந்தது. 2ம் வாதி சதாவிற்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் எனக்கு சரியாக நியாபகம் இல்லை.

3. எங்கள் இருவருக்கும் எனது அப்பாவும் பிரதிவாதி ரவியும் சேர்ந்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் எனக்கு மட்டும் அப்பா தான் திருமணம் செய்து வைத்தார். எங்கள் இருவருக்கும் சரிசமமாக 15 சவரன் நகை மற்றும் சீர்வரிசை பொருட்களை போட்டு எனது அப்பாவும் பிரதிவாதியும் சேர்ந்து தான் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் இல்லை எனது அப்பா தான் திருமணம் செய்து வைத்தார் எனக்கு 7 சவரன் நகை தான் போட்டார்கள் சீர்வரிசை எதுவும் போடவில்லை. எனது தாயார் எப்போது இறந்தார் என்றால் எனது அப்பா இறந்த சிறிது காலத்திலேயே இறந்துவிட்டார். எனது அம்மாவிற்கு இறுதி சடங்கு ரவி தான் செய்தார் என்றால் இல்லை யார் செய்தது என்றால் யாரும் செய்யவில்லை. எனது அம்மா இறந்த போது 20 சவரன் நகை வைத்திருந்தார் என்றாலும் எனது அண்ணன் ரவி

எங்கள் இருவருக்கும் பகிர்ந்து கொடுத்தார் என்றாலும் இல்லை. எனது அம்மா நகை எதுவும் வைத்திருந்தாரா என்றால் வைத்திருந்தார். எவ்வளவு நகை வைத்திருந்தார் என்றால் 20 முதல் 25 சவரன் நகை வைத்திருந்தார்.

4. எனது வழக்குரையில் மற்றும் முதன்மை வாக்குமூலத்தில் எனது தாயார் வைத்திருந்த 20 சவரன் நகை யார் வசம் உள்ளது என்று சொல்லியிருக்கிறேனா என்றால் எனது அண்ணன் வசம் உள்ளது என சொல்லியிருக்கிறேன். நான் மேலே சொன்ன நகை விவரம் குறித்து வழக்குரையிலும் முதன்மை விசாரணை வாக்குமூலத்திலும் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல நான் சொல்லியிருக்கிறேன். எனது வழக்குரையில் நானும் 2ம் வாதியும் ஒரே முகவரியில் வசிப்பதாக விவரம் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். 2ம் வாதி ஓசூரில் வசிக்கிறார். ஆரணியில் வழக்கு போட்டதால் ஆரணி முகவரி கொடுத்திருக்கிறார்.2ம் வாதி ஆரணியில் வசிப்பதற்கான ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதி ரவி எனக்கு நான் ஆரணியில் இடம் வாங்குவதற்காக ரூ.50 ஆயிரம் கொடுத்தார் என்றால் இல்லை எனக்கு 1 பைசா கூட கொடுக்கவில்லை. நான் வீடு கட்டுவதற்கு பிரதிவாதி எனக்கு ரூ.1,50,000/- கொடுத்தார் என்றால் இல்லை எனது கணவர் லோன் போட்டு வீடு கட்டப்பட்டது. 2ம் வாதிக்கு இடம் வாங்குவதற்கு பிரதிவாதி ரூ.70 ஆயிரமும் 2ம் வாதி வீடு கட்டுவதற்கு ரூ.2லட்சமும் கொடுத்திருக்கிறார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது 2ம் வாதியை தான் கேட்க வேண்டும்.

5. 2003 மற்றும் 2004 கால கட்டத்தில் எனது தகப்பனாருக்கு நான் மருத்துவ செலவு செய்ததாக பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு இருதய நோய் இருந்தது என்றாலும் பிரதிவாதி ரவி ரூ.2லட்சம் அவரது சிகிச்சைக்கு செலவு செய்தார் என்றாலும் அப்படி செலவு செய்து இருந்தால் எனது அப்பா திருப்பி கொடுத்துவிட்டார். எனது தகப்பனார் மருத்தவ செலவிற்காக ரூ.84ஆயிரம் ரவி மிலிட்டிரியில் இருந்த போது கடன் வாங்கினார் என்றால் கடன் வாங்கவில்லை மிலிட்டிரியில் உள்ள அட்டை வைத்து இலவசமாக வைத்தியம் பார்த்தார். வழக்கு சொத்துகளின் ஆவணங்களை பிரதிவாதி எடுத்து சென்று வைத்திருப்பதாக பொய்யான விவரம் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல அவர் தான் வைத்திருக்கிறார். சொத்தை ரவி கொடுத்த பணத்தில் வாங்கியதால் தான் எனது தகப்பனார் சொத்தின் ஆவணங்களை ரவியிடம் கொடுத்தார் என்றால் இல்லை. எனது தகப்பனார் இறந்த பிறகு எடுத்து சென்று விட்டார். எனது தகப்பனார் ஓய்வு பெற்ற பிறகு வந்த பணப்பலன்களை பெண்கள் ஆகிய எங்களுக்கு பிரித்து கொடுத்துவிட்டார் என்றாலும் சொத்தை அவரது மகனுக்கு கொடுத்து விட்டார் என்றால் அது போன்று எதுவும் கொடுக்கவில்லை.

6. எனது தகப்பனாரின் ஓய்வூதிய பணப்பலன்கள் குறித்து எனது வழக்குரையிலும் முதன்மை வாக்குமூலத்திலும் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். சொத்து மற்றும் பணப்பலன்கள் குறித்து எனது உறவினர்களுக்கு தெரியும் என்றாலும் அது சம்மந்தமாக எங்களிடம் பேசினார்கள் என்றாலும் நாங்கள் ஏற்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. அவ்வாறு பேசம் போது 2ம் வாதி நீதிமன்றத்திற்கு வரமாட்டேன் என்று சொல்லிவிட்டார் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. இவ்வழக்கின் 2ம்

வாதி சுதாவை விசாரிக்க இருக்கிறேனா என்றால் அவர் வந்தால் விசாரிக்க இருக்கிறேன். பல பொய்யான விவரங்கள் கூறி வழக்கு தாக்கல் செய்திருப்பதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகள் பிரதிவாதிக்கு உரிமையானது என்றாலும் எங்களுக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. எங்களுக்கு பொருள் உதவி செய்து விட்டார்கள் என்றாலும் சரியல்ல.